सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

## யாழ்ப்பாணம்

## செய்திக் குறிப்பு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தூதுக்குழுவினரின் இந்திய விஜயம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தூதுக்குழுவினரின் இந்திய விஜயம் தொடர்பாக ஊடகங்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்குமுகமாக இந்திய வெளிவிவகார அமைச்சின் உத்தியோக பூர்வ பேச்சாளர் நேற்றைய தினம் பின்வருமாறு தெரிவித்தார்:

" இலங்கையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (த.தே.கூ) ஆறுபேரடங்கிய தூதுக்குழு இம்மாதம் 16ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை இந்தியாவுக்கு விஜயம் செய்கிறது. இக்குழுவுக்கு திரு.இரா.சம்பந்தன் (பா.உ) அவர்கள் தலைமை தாங்குகிறார். அதில் திரு.மாவை.எஸ்.சேனாதிராஜா(பா.உ), திரு.கே.(சுரேஷ்)பிரேமசந்திரன் (பா.உ), திரு.பி.செல்வராஜா (பா.உ), திரு செல்வம் அடைக்கலநாதன் (பா.உ), மற்றும் திரு.எம்.ஏ.சுமந்திரன் (பா.உ) உள்ளடங்குவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு தூதுக்குழு 2012 ஒக்டோபரில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தது.

தூதுக்குழு இந்தியப் பிரதமரை இன்று சந்தித்தது. முன்னதாக அது இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரைச் சந்தித்தது.

பிரதமர் இலங்கை அரசியல் யாப்பினுடைய 13ஆம் திருத்தத்தினுடைய முக்கியமான சில சரத்துக்களை நீர்த்துப்போகச்செய்வதற்கு இலங்கை அரசு திட்டமிடுவது பற்றி வரும் அறிக்கைகளால் கலக்கமடைந்திருப்பதாக தெரிவித்திருந்தார். திட்டமிடப்படும் மாற்றங்கள் இலங்கை அரசால் இந்தியாவுக்கும் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்துக்கும் வழங்கப்பட்ட 13ஆம் திருத்தத்துக்கு அப்பாற்சென்று அரசியற் தீர்வை எட்டுவது தொடர்பான வாக்குறுதிகள் பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்பது கவனத்திற் கொள்ளப்பட்டது. அவ்வாறான மாற்றங்கள் இலங்கை அரசால் அமைக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும்படி அரசியற் தீர்வுக்கு அழைப்பு விடுத்த பரிந்துரைகளுக்கு ஒவ்வாததாக அமையும்.

இந்தியப் பிரதமர் இலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தினுடைய நலனிலும் நல்வாழ்விலும் ஆழ்ந்த கரிசனை கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். இலங்கைத் தமிழ்ச் சமூகம் கௌரவமான, பிரஜைகள் எனும் வகையில் சம அந்தஸ்துடையவர்களாக வாழ்க்கையை நடத்தவேண்டும் என்பது பற்றிய தனது எதிர்பார்ப்பை வலியுறுத்தினார். ஆத்துடன் இந்தியாவானது சமத்துவம், நீதி, சுய கௌரவம் என்பவற்றில் கட்டியமைக்கப்பட்ட தமிழ் சமூகத்தினுடைய எதிர்காலத்துக்காக அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் எனவும் தெரிவித்தார்."

யாழ்ப்பாணம்

19.06.2013